## 78. உனக்கு இருக்கும் பலத்தோடே

### பல்லவி

உனக்கு இருக்கும் பலத்தோடே போ
சத்துருவை காலால் மிதிப்பாய்
உன்னை அனுப்பினவர் தேவன் அல்லவா
உன் பெலவீனத்தில் அவர் பெலன் விளங்கும்

### சரணங்கள்

1. உள்ளங்கை மேகம் தானே
எலியா வேலைக்காரன் கண்டது
பெரும்மழையை அதுவே கொண்டு வந்தது
வறட்சியான தேசம் செழிப்பானது
- உனக்கிருக்கும்

2. ஐந்து அப்பம் ரெண்டு மீன்கள்
அற்புதர் இயேசுவின் கையிலே
ஐந்தாயிரம் புருஷர் போஷிக்கப்பட்டு
பனிரெண்டு கூடை நிறைய எடுத்தனர்
- உனக்கிருக்கும்

3. சாறிபாத் விதவையின் வீட்டில்
கொஞ்சமாவு கொஞ்ச எண்ணெய் தான்
முதலாவது எலியா போஷிக்கப்பட்டார்
வாழ்க்கையே வளமாக மாறியது
- உனக்கிருக்கும்